நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, அரியலூர்
முன்னிலை: திருமதி. இரா. சங்கீதா சேகர், பி.ஏ.பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.I, அரியலூர்.

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் 18- ஆம் நாள் செவ்வாய் கிழமை

S.T.C.No.1025/2023
CNR No.TNAL040086902023

முத்துவேல், 42/26,
த/பெ.பிச்சை பிள்ளை,
எண்.677, வடக்கு தெரு,
கே.பொய்யூர்,
கடுகூர் அஞ்சல்
அரியலூர் மாவட்டம். .... புகார்தாரர்

/எதிர்/

குமார்,53/26,
த/பெ.மாரியப்பன்
19/D-11 - A/3 KK.நகர்,
ராஜாஜி நகர் - அஞ்சல்,
அரியலூர்,
அரியலூர் வட்டம்,
அரியலூர் மாவட்டம். .... எதிரி

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 14.09.2023 ம் தேதியன்று கோப்பில் எடுக்கப்பட்டு இறுதி விசாரணைக்காக 18.08.2026 ம் தேதியன்று வந்த போது புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.R.சிவம்,B.Com.,LLB., மற்றும் திரு.S.விடுதலைச்செல்வன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:12:34 +0530

வழக்கறிஞர் திரு.B.வெற்றிசுடர்மணி,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு சாட்சியங்களையும், ஆவணங்களையும், வாதுரைகளையும் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>**தீர்ப்புரை**</u>

புகாரின் சுருக்கம்:

இவ்வழக்கின் புகார்தாரர் முத்துவேல் என்பவரிடம் எதிரி குமார் வியாபார கொள்முதலுக்காகவும், அவசர வீட்டு செலவுக்காகவும், ரூ.6,00,000/– பணம் கடனாக 2023 மார்ச் முதல் வாரத்தில் பெற்றுக் கொண்டு மூன்று மாதங்களில் திருப்பி தருவதாக கூறியதாகவும், மேற்படி கடன் தொகைக்காக ஆஜர் எதிரி ஆகிய நீர் திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அரியலூர் கிளை வங்கி காசோலை எண்.676650 யை 27.06.2023 ந் தேதியிட்டு கொடுத்ததாவும், புகார்தாரர் மேற்படி காசோலையை 28.06.2023 ந் தேதி அரியலூர் இந்தியன் வங்கி கிளையில் வசூல் செய்து கொள்ள தாக்கல் செய்துள்ளார். அந்த காசோலை போதிய பணம் இல்லாத காரணத்தினால் கடந்த 30.06.2023 ந் தேதியிட்டு வங்கியால் குறிப்பிரையுடன் திருப்பப்பட்டுள்ளது. எனவே ஆஜர் எதிரி ஆகிய உம்மை புகார்தாரர் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் நண்பர்கள் மூலமாகவும் தொடர்பு கொள்ள முயற்சித்த போது நீர் கைபேசியை எடுக்காமலும் அறிவிப்பை பெற்றுக் கொண்ட நீர் காசோலையில் கண்ட தொகையையும் கொடுக்காமல், புகார்தாரரின் பணத்தை திரும்ப தராமல் ஏமாற்றியதாக எதிரி மீது மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138, 142 ன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென புகார்தாரர் புகார் மனு தாக்கல் செய்துள்ளார்.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:12:40 +0530

2. புகார்தாரர் தாக்கல் செய்த புகார் மனு தனிப்புகார் அடிப்படையில் பிரமாண வாக்குமூலம் பெறப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, எதிரிக்கு எதிராக காசோலை மோசடி சம்பந்தமாக முதல் தோற்ற வழக்கு இருப்பதாக முடிவு செய்யப்பட்டு வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் அடிப்படையில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் புகார் மனு நகல் எதிரிக்கு வழங்கப்பட்டு, புகார் சம்பந்தமாக பரிசீலித்து யோசிக்க உரிய கால அவகாசம் வழங்கப்பட்டு, அதன் பின்னிட்டு எதிரியிடம் புகார் மனுவில் எதிரிக்கு எதிராக உள்ள பிரிவு 138, 142 மாற்று முறை ஆவணச் சட்டத்தின் கீழான குற்ற செய்கைகள் குறித்து விளக்கி வினவிய போது எதிரி தான் குற்றவாளி இல்லை என்றும் பொய் வழக்கு என தெரிவித்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிடுமாறு கோரியதால் புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

3. புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் முத்துவேல் என்பவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, புகார்தாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. புகார்தாரர் இந்த வழக்கில் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவரது நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகாரில் குறிப்பிட்ட சங்கதிகளையே நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளார். 27.06.2023 ந் தேதியிட்ட எதிரி எனக்கு வழங்கிய திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளையின் காசோலை (காசோலை எண்.676650) அ.சா.ஆ.1 ஆகவும், 30.06.2023 ந் தேதியிட்ட அரியலூர் கிளை இந்தியன் வங்கியால் கொடுக்கப்பட்ட காசோலை திருப்பப்பட்ட மெமோ அ.சா.ஆ.2 ஆகவும், 08.07.2023 ந் தேதியிட்ட எதிரிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அ.சா.ஆ.3 ஆகவும்,

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:12:48 +0530

எதிர்மனுதாரர் எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரி மீது பிரிவு 138, 142 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாட்சியமளித்து புகார்தாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, பின்னர் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் உள்ள எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விளக்கி வினவிய போது எதிரி சாட்சியத்தை பொய் சாட்சியங்கள் என்றும், தான் குற்றவாளி இல்லை என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என குறிப்பிட்ட நிலையில், எதிரி தரப்பில் எ.சா.1 முதல் எ.சா.4 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட எ.சா.1 குமார் தனது நீதிமன்ற முதல் விசாரணையில் தான் புகார்தாரரிடமிருந்து தனது தேவைக்காக கடந்த 2022 ஆம் வருடம் ஜூன் மாதம் கடனாக ரூபாய்.3,00,000/- பெற்றேன் என்றும், அதற்கு பிணையமாக புகார்தாரர் தன்னிடம் இருந்து அன்றைய தினமே பூர்த்தி செய்யப்படாத நான் கணக்கு வைத்திருக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அரியலூர் கிளையின் மூன்று காசோலைகளை பெற்றுக் கொண்டதாகவும், தானும் புகார்தாரரை நம்பி பூர்த்தி செய்யப்படாத காசோலையினை என் கையொப்பம் மட்டும் போட்டு கொடுத்தேன் என்றும், மேற்படி கடன் தொகைக்கு நானும் புகார்தாரரும் ஒப்புக்கொண்டபடி பல்வேறு தேதிகளில் எனது G-Pay மொபைல் எண். 9751348844 வங்கி கணக்கு மூலம் புகார்தாரரின் G-Pay வங்கி கணக்கு புகார்தாரரின் மொபைல் போன் நம்பர் 9566101807 என்ற எண்ணிற்கு தொகைகளை திருப்பி செலுத்தியுள்ளதாகவும்,

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:12:55 +0530

நான் ஒருபோதும் புகார்தாரரிடம் நான் பிணையமாக கொடுத்த காசோலையினை நான் வாங்கிய ரூபாய்.3,00,000/- கடனுக்காக வசூலுக்காக வங்கியில் தாக்கல் செய்து கொள்ளுங்கள் என்று கூறவில்லை என்றும், மாறாக புகார்தாரர் பொய்யாக நான் கூறியதாக கூறி நான் புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய தொகையை விட கூடுதலாக ரூபாய்.6,00,000/- என பூர்த்தி செய்து என்னை ஏமாற்ற வேண்டும் என்ன எண்ணத்தில் என்னிடம் தகவல் கூறாமல் தன்னிச்சையாக காசோலையினை வசூலுக்காக தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் வழக்கு காசோலை தவிர மேலும் இரண்டு காசோலைகள் காசோலை எண் 676635 மற்றும் மற்றொரு காசோலை எண் தெரியாத இரண்டு காசோலைகள் புகார்தாரர் வசம் பிணையமாக வைத்துள்ளார் என்றும், புகார்தாரர் எனக்கு கடந்த 08.07.2023 ஆம் தேதி அன்று ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஒன்றாகும் என்றும், நான் மேற்படி அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கடந்த 28.07.2023 ந் தேதியில் அனுப்பியுள்ளேன் என்றும், அந்த பதில் அறிவிப்பில் நான் புகார்தாரரிடம் வாங்கிய கடன் தொகை ரூபாய்.3,00,000/-க்கு நான் பல்வேறு தேதிகளில் புகார்தாரருக்கு அவரது G-Pay கணக்கு மூலம் செலுத்திய தொகை ரூபாய்.1,20,000/- போக மீதி உள்ள தொகையினை நான் செலுத்த தயாராக உள்ளேன் என்று பதில் அறிவிப்பு அனுப்பி இருந்தும் புகார்தாரர் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் எனது கடையில் பணிபுரியும் சக்திவேல் என்பவரின் மூலம் அவரது G-Pay வங்கி கணக்கில் இருந்து புகார்தாரரின் G-Pay வங்கி கணக்கிற்கு ரூ.8000/- இரு தேதிகளில் (6,000, 2,000) கடந்த 2022 ம் வருடம் அனுப்பியுள்ளேன் என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது கடந்த 17.11.2024 ந் தேதி தான் அவரை நீதிமன்ற வளாகத்தில் வைத்து திட்டி, கொலைமிரட்டல் விடுத்ததாக பொய் புகார்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:13:02 +0530

கொடுத்து, என்னிடம் பணத்தை கொடு இல்லை என்றால் வழக்கு போடுவேன் என்று மிரட்டினார் என்றும், என் மீது அரியலூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.379/2024, சட்ட பிரிவுகள் 296(b), 351(3) of BNS ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், மேலும் வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது கடந்த 07.10.2024 ந் தேதி காலை 8.00 மணிக்கு புகார்தாரர் எனது வீட்டிற்கு வந்து என்னையும் எனது குடும்பத்தாரையும் மிரட்டி, பணம் கொடு இல்லை என்றால் குடும்பத்தோடு கொளுத்திவிடுவேன் என்று மிரட்டி, பயமுறுத்தி என்னி டமிருந்து எனது மனைவிக்கு சொந்தமான திருச்சி அருகே உள்ள காந்தளூர் சத்யா நகரில் உள்ள நான்கு வீட்டு மனைகளின் பத்திரத்தை வலுக்கட்டாயமாக பிடுங்கிகொண்டு பணத்தை கொடுத்தால் தான் பத்திரம் தருவேன் என்று கூறி ஒரு வெள்ளை தாளில் எழுதி கொடுத்துவிட்டு மிரட்டிசென்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

எ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் காசோலையில் குறிப்பிட்ட தேதிக்கு பிறகு நான் பணம் கொடுத்ததாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் காசோலை கொடுத்த பிறகுதான் ஜிபேயில் பணம் கொடுத்துள்ளேன் என்றும், என்னுடைய செல்போன் எண்.9751348844 என்றால் சரிதான் என்றும், இந்த செல்போனுக்கு புகார்தாரர் 25.01.2023 அன்று ரூ.5,000/- மற்றும் 20.01.2023 அன்று ரூ.10,000/- அனுப்பியுள்ளார் என்றால் சரிதான் என்றும், புகார்தாரர் மேற்படி தொகைகளை எனக்கு அனுப்பியது பற்றி நான் அனுப்பிய பதில் அறிவிப்பிலோ அல்லது எனது முதல் விசாரணையிலேயே சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும், 11.06.2021 அன்று என் மனைவி பெயரில் புகார்தாரர் எழுதி கொடுத்ததாக எ.சா.ஆ.3 ஆவணத்தை எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் புகார்தாரர் என் வீட்டுக்கு வந்து மிரட்டி என் மனைவியிடமிருந்து அசல் பத்திரத்தை வாங்கி சென்றுவிட்டார் என்பதால்

R
SANGEETHA
SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:13:08 +0530

தாக்கல் செய்துள்ளேன் என்றும், இது தொடர்பாக என் மனைவியும் காவல்நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான் என்றும், எ.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் பக்கத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய மனைவியுடையது என்றால் சரிதான் என்றும், எ.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் பக்கத்தில் உள்ள சங்கதிகள் சரிதான் என்றால் ஆமாம். அதை நான் தான் எழுதினேன் என்றால் சரிதான் என்றும், எ.சா.ஆ.3 ஆவணத்தை பற்றி நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும், எ.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் பக்கத்தில் தேதி இல்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

எ.சா.2 ஸ்ரீனிகணேசன் தனது நீதிமன்ற முதல் விசாரணையில் அரியலூர் இந்தியன் வங்கியில் இவ்வழக்கின் எதிரி குமார் வங்கி கணக்கு வைத்துள்ளார். அவருடைய வங்கி கணக்கு எண்.903008379. அவர் வங்கி கணக்கு வரவு செலவு ஆவணங்களை நான் தற்போது எடுத்து வந்துள்ளேன். 21.07.2022 அன்று ரூ.6000/- பணத்தை குமார் தன்னுடைய வங்கி கணக்கிலிருந்த UPI Reference No.220288511009 அனுப்பியுள்ளார். 12.08.2022 அன்று ரூ. 2000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 12.09.2022 அன்று ரூ. 10,000/- பணத்தை UPI மூலமாக அனுப்பியுள்ளார். 21.09.2022 அன்று ரூ. 2000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 27.09.2022 அன்று ரூ. 2000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 01.10.2022 அன்று ரூ. 6000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 08.10.2022 அன்று ரூ. 2000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 10.10.2022 அன்று ரூ. 1200/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 27.10.2022 அன்று ரூ. 2000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 02.11.2022 அன்று ரூ. 6000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 21.11.2022 அன்று ரூ. 6000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 25.11.2022 அன்று ரூ. 2000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 01.12.2022 அன்று ரூ. 6000/- UPI மூலமாக

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:13:15 +0530

அனுப்பியுள்ளார். 12.12.2022 அன்று ரூ. 5000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 08.01.2023 அன்று ரூ. 5000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 08.02.2023 அன்று ரூ. 6000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 14.02.2023 அன்று ரூ. 8000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 24.02.2023 அன்று ரூ. 8000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். 02.03.2023 அன்று ரூ. 8000/- UPI மூலமாக அனுப்பியுள்ளார். மேற்கண்ட தொகைகள் அனுப்பியதற்கான வங்கி Statement 18 பக்கங்கள் எ.ம.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (இந்த ஆவணத்தை குறியீடு செய்ய மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த ஆவணம் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதது என்று எடுத்துரைத்து ஆட்சேபனை செய்தார்). என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்குவிசாரணையில் UPI ID யாருடைய பெயரில் உள்ளது என்பதை வங்கி தலைமை அலுவலகத்தில் கேட்டு பெற்று என்னால் தாக்கல் செய்ய இயலும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

எ.சா.2 தனது குறுக்குவிசாரணையில் நான் முதல் விசாரணையில் கூறிய UPI மூலமாக அனுப்பப்பட்ட தொகைகள் யார் வங்கி கணக்கிலிருந்து யார் வங்கி கணக்கிற்கு சென்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும், 02.03.2023 தேதிக்கு பிறகு வேறு எந்த பரிவர்த்தனையும் நான் எடுத்து வந்த எ.ம.சா.ஆ.4 ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான் என்றும், அந்த பண பரிவர்த்தனைகள் எதற்காக நடந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

எ.சா.3 சக்திவேல் தனது நீதிமன்ற முதல் விசாரணையில் எதிரி குமார் நடத்தி வரும் RR ஸ்கேல்ஸ் நிறுவனத்தில் சர்வீஸ் என்ஜினியராக பணிபுரிந்து வருகிறார் என்றும், எனக்கு கடுகூர் சிட்டி யூனியன் வங்கி கிளையில் சேமிப்பு கணக்கு உள்ளது என்றும், அதன் எண். SB.AC.No.500101012395493 என்றும், இந்த சேமிப்புகணக்கில் இருந்து வழக்கின் மனுதாரர் முத்துவேல் என்பவரின் Gpay

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:13:22 +0530

எண்ணிற்கு எனது போன் பே எண் மூலம் கடந்த 12.11.2022 அன்று ரூ.6,000/–மும், பின்னர் 06.12.2022 அன்று ரூ.2,000/–மும் எனது முதலாளியும் இந்த வழக்கின் எதிரியுமான குமார் அவர்கள் அனுப்ப சொன்னதன் பேரில் அனுப்பியுள்ளேன் என்றும், இந்த பணமானது எங்கள் நிறுவனத்திற்காக வாடிக்கையாளர்கள் எனது போன் Pay எண்ணிற்கு அனுப்பிய நிறுவனத்திற்கு சொந்தமான பணம் என்றும், மேற்படி மனுதாரர் முத்துவேல் என்பவரிடம் கடன் வாங்கியிருப்பதாகவும், அதற்காக பணம் அனுப்ப வேண்டும் என்று எனது நிறுவன உரிமையாளர் என்னிடம் சொன்னார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 தனது குறுக்குவிசாரணையில் எதிரி பணம் போட சொன்னதன் அடிப்படையில் வங்கி கணக்கில் பணம் போட்டேன் என்றால் சரிதான் என்றும், நான் வங்கியில் பணம் போட்டது சம்மந்தமாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

எ.சா.4 மணிகண்டன் தனது நீதிமன்ற முதல் விசாரணையில் இவ்வழக்கின் சக்திவேல், த/பெ. கலியபெருமாள் என்பவர் எங்கள் வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளார். அவருடைய வங்கி கணக்கு எண்.50010101239549З. அவர் தன்னுடைய வங்கி கணக்கிலிருந்து 12.11.2022 அன்று ரூ. 6000/– பணத்தை ஜீபே மூலமாக முத்து என்பவருக்கு அனுப்பியுள்ளார். 06.12.2022 அன்று ரூ. 2000/– பணத்தை ஜீபே மூலமாக முத்து என்பவருக்கு அனுப்பியுள்ளார். இதற்கான ஆவணங்களை தற்போது நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். சக்திவேல் என்பவருடைய வங்கி கணக்கின் ஸ்டேட்மன்ட் முதல் பக்கம் மற்றும் மேற்படி ஜீபே பரிவர்தனைகளின் ஸ்டேட்மன்ட் எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதததது என ஆட்சேபனை செய்கிறார்).

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:13:29 +0530

எ.சா.4 தனது குறுக்குவிசாரணையில் 2023–ம் வருடம் மார்ச் மாதம் மற்றும் அதற்கு பின்னே உள்ள பரிவர்த்தனைகள் பற்றி நான் முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான் என்றும், முத்து என்பவர் யார் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும், முத்து என்பவரின் வங்கி கணக்கு மற்றும் மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. **புகார் மனு புகார்தாரர் சாட்சியங்கள், சான்றாவணங்கள், எதிரி தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் புகார்தாரர், எதிரி மீதான மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138, 142ன் கீழான காசோலை மோசடி குற்றத்தை சந்தேகத்திற்கு இடமின்றி தகுநிலை ஐயத்திற்கு அப்பால் நிரூபணம் செய்துள்ளாரா? என்பதேயாகும். மேலும் புகார்தாரருக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்னவென்பதே ஆகும்.**

<u>தீர்வு</u>

8. புகார்தாரர் புகாரில் எதிரி வியாபார கொள்முதலுக்காகவும், அவசர வீட்டு செலவுக்காகவும், ரூ.6,00,000/– பணம் கடனாக 2023 மார்ச் முதல் வாரத்தில் பெற்றுக் கொண்டு மூன்று மாதங்களில் திருப்பி தருவதாக கூறியதாகவும், மேற்படி கடன் தொகைக்காக எதிரி திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அரியலூர் கிளை வங்கி காசோலை எண்.676650 யை 27.06.2023ந் தேதியிட்டு கொடுத்துள்ளார். புகார்தாரர் மேற்படி காசோலையை 28.06.2023ந் தேதி அரியலூர் இந்தியன் வங்கி கிளையில் வசூல் செய்து கொள்ள தாக்கல் செய்ததாகவும், அந்த காசோலை போதிய பணம் இல்லாத காரணத்தினால் கடந்த 30.06.2023ந்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:13:37 +0530

தேதியிட்டு வங்கியால் குறிப்புரையுடன் திருப்பப்பட்டுவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டு பதில் அறிவிப்பில் உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு அனுப்பியுள்ளதாகவும், பின்னர் எதிரி எந்தவிதமாக தொகையும் வழங்கவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. எதிரி புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்புக்கு, எதிரி உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். ம.சா.1 விசாரிக்கப்பட்ட பின்னர் ம.சா.1 குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது குறுக்குவிசாரணையை பொறுத்தவரை எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று என் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி கொடுத்த பதில் அறிவிப்பை நான் குறிப்பாக புகாரில் மறுக்கவில்லை என்றால் பதில் அறிவிப்பில் எதிரி குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்று குறிப்பிட்டுள்ளேன். தனித்தனியாக மறுக்கவில்லை. எதிரிக்கு எந்த தேதியில் காசோலையில் குறிப்பிட்டுள்ள பணத்தை கொடுத்துள்ளேன் என்று சத்தியபிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் மார்ச் முதல் வாரம் 2023-ம் வருடம் என்று குறிப்பிட்டுள்ளேன். 2023 ம் வருடம் மார்ச் முதல் வாரம் எதிரி பணம் கேட்டார் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அப்போதுதான் பணத்தை கொடுத்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன். எனது புகாரில் எதிரி காசோலை கொடுத்ததாகவும் 27.06.2023 அன்று வசூலுக்காக தாக்கல் செய்யும் பட்சத்தில் பணம் இருக்கும் என்று உத்தரவாதம் அளித்திருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். காசோலையை 27.06.2023 அன்று நான் தாக்கல் செய்யவில்லை என்றால் 28.06.2023 அன்றுதான் தாக்கல் செய்தேன் என்றும், ரூ. 6,00,000/- பணம் கொடுத்ததற்கு காசோலையை தவிர வேறு எதுவும் ரசீது வாங்கவில்லை என்றால்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:13:44 +0530

சரிதான். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் ரூ. 3,00,000/- மட்டும்தான் கடன் வாங்கியதாகவும் அதில் ரூ. 1,20,000/- திருப்பி கொடுத்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மீதமுள்ள ரூ. 1,80,000/- பணத்தை அவர் தர தயாராக இருந்தார் என்று அந்த பதில் அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தார் என்றால் சரிதான். ரூ. 3,00,000/-த்திற்கு பதிலாக ரூ. 6,00,000/- கேட்டதாகவும் பணம் தரவில்லை என்று அந்த பதில் அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தார் என்றால் பொய்யாக அவ்வாறு சொல்லியிருந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

10. **" மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் காசோலை மோசடி குற்றம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனில் கீழ்க்கண்ட மூன்று சட்ட பூர்வமான விதிமுறைகள் மெய்பிக்கப்பட்டிருக்க வேண்டும்."**

(1) புகார்தாரர், எதிரி ஆகியோருக்குமிடையே சட்டப்படி செல்லத்தக்க கடன் அல்லது கடன் பொறுப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

(2) சட்டப்படி செல்லத்தக்க கடன் அல்லது அந்த கடன் பொறுப்பிற்காக அதனை தீர்க்கும் நோக்கத்தோடு பகுதியாகவோ, முழுமையாகவோ உள்ள தொகைக்கு காசோலை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(3) அவ்வாறு வழங்கப்பட்ட காசோலை எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

மேற்படி மூன்று ஆக்க கூறுகள் நிறைவு செய்யப்பட்டிருந்தால் மட்டுமே பிரிவு 138 மாற்று முறை ஆவணச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

11. இந்த வழக்கில் புகார்தாரர் எதிரிக்கு வழங்கிய கடன் குறித்து சாட்சியம் அளித்து ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:13:53 +0530

வைத்து பார்க்கும் போது புகார்தாரர் எதிரிக்கு ரூ.6,00,000/– க்கு கடனாக கொடுத்து அந்த கடனை தீர்ப்பதற்காக வழங்கப்பட்ட காசோலை திருப்பப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

12. மாற்றுமுறை ஆவணச் சட்டம் 139–ன் கீழ் காசோலை மோசடி குற்ற வழக்குகளில் காசோலையை (Holder in due course) வைத்திருப்பவருக்கு அந்த காசோலை சட்ட பூர்வமான கடன் பொறுப்புகளுக்காக வழங்கப்பட்டதாக அனுமானிக்க வேண்டுமென மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 139 வலியுறுத்துகிறது.

13. இந்த வழக்கில் புகார்தாரர் தான் எதிரிக்கு ரூ.6,00,000/– கடனாக கொடுத்ததாகவும், அந்த கடனுக்கான ஆதாரமாக புகார்தாரருக்கு கொடுத்த அந்த காசோலை வங்கியில் தாக்கல் செய்யப்பட்டு, பின்னர் எதிரியின் வங்கி கணக்கு போதிய பணமில்லை என காசோலை மதிப்பு மறுக்கப்பட்டு விட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரர் எதிரி சட்டப்பூர்வ கடன் தொகையை தீர்ப்பதற்காக காசோலை வழங்கியதாக சாட்சியம் அளித்து புகார்தாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் புகார்தாரருக்கு ஆதரவாக மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 139 ன் அனுமானத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

14. எதிரி தான் எந்தவிதமான கடனும் வாங்கவில்லை என்றும், புகார்தாரருக்கு வழங்கப்பட்ட காசோலை சட்டபூர்வமான கடனுக்காக வழங்கப்பட்ட காசோலை இல்லை என்றும், வழக்கு காசோலை இந்த வழக்கின் புகார்தாரருக்கு வழங்கப்படவில்லை என்றும், எதிரியை பொறுத்தவரையில் வழக்கு காசோலை என்பது இந்த வழக்கின் புகார்தாரருக்கு வழங்கப்படவில்லை என்பது சம்மந்தமாக

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:14:03 +0530

எந்தவிதமான வழக்கிற்கும் முந்தைய ஆவணங்களும் இந்த வழக்கில் எதிரியால் தாக்கல் செய்யப்படவில்லை. ஆனால் எதிரி தரப்பில் எ.சா.1 முதல் எ.சா.4 வரை சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.5 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எ.சா.1 எதிரி குமார் தன்னுடைய சாட்சியத்தில் தான் புகார்தாரருக்கு 21.07.2022 முதல் 04.09.2024 வரை ஜி.பே. மூலம் பணம் அனுப்பினேன் என்றும், பணம் அனுப்பியதற்கான பண பரிவர்த்தனை கணக்கு விவரங்கள் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் எதிரி தான் புகார்தாரரிடமிருந்து ரூபாய்.3,00,000/- கடன் வாங்கியதற்காக மேற்படி தேதிகளில் ஜி.பே. மூலம் ரூ.1,20,000/- செலுத்தியுள்ளதாக தனது பதில் அறிவிப்பிலும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதன் பின்னர் எதிரி புகார்தாரருக்கு ஏன் நிரப்பப்படாத காசோலைகளை வழங்கினார் என்பதை எதிரி தான் நிரூபணம் செய்ய வேண்டும். மேலும் எ.சா.1 எதிரி குமார் தனது குறுக்குவிசாரணையில் புகார்தாரர் 25.01.2023 அன்று ரூ.5,000/- 20.01.2023 அன்று ரூ.10,000/- அனுப்பியுள்ளார் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.1 தனது குறுக்குவிசாரணையில் தானும் எதிரியும் ரூபாய்.10,000/- ரூ.20,000/- கொடுத்து வாங்கி கொள்வோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

15. எ.சா.2 ஸ்ரீனிகணேசன் என்பவர் ஜி.பே.மூலமாக மேற்படி தேதிகளில் எதிரியின் வங்கி கணக்கில் இருந்து அனுப்பினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அந்த வங்கி ஸ்டேட்மெண்ட் எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் எ.சா.2 தனது குறுக்குவிசாரணையில் UPI மூலமாக அனுப்பப்பட்ட தொகைகள் யார் வங்கி கணக்கில் இருந்து யார் வங்கி கணக்கிற்கு சென்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். எ.சா.3 சக்திவேல் தன்னுடைய சாட்சியத்தில் எதிரி வங்கி

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:14:09 +0530

கணக்கில் இருந்து ஜி.பே மூலமாக புகார்தாரரின் செல்போன் எண்ணிற்கு எதிரி சொல்லி தான் பணம் அனுப்பியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் எ.சா.3 தனது குறுக்குவிசாரணையில் எதிரி வாங்கிய கடன் பற்றிய முழு விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும், எதிரி பணம் போட சொன்னதன் அடிப்படையில் பணம் போட்டேன் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. எ.சா.4 வங்கி மேலாளர் தன்னுடைய சாட்சியத்தில் எ.சா.3 சக்திவேல் என்பவர் தங்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ளார் என்றும், அவருடைய வங்கி கணக்கில் இருந்து ஜி.பே. மூலமாக முத்து என்பவருக்கு பணம் அனுப்பியது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எ.சா.1 எதிரி மற்றும் ம.சா.1 புகார்தாரர் ஆகியோர் சாட்சியத்தில் இருந்தும், எ.சா.ஆ.1, எ.சா.ஆ.4, எ.சா.ஆ.5 ஆவணங்களில் இருந்தும், எதிரியும் புகார்தாரரும் பணம் கொடுத்து வாங்கி கொள்வார்கள் என்பது இதன் மூலம் தெரியவருகிறது. எ.சா.1 தனது சாட்சியத்தில் புகார்தாரர் தன்மீத பொய் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், அதன் ஆன்லைன் காப்பி எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அது இந்த வழக்கிற்கு பிறகு பதிவு செய்யப்பட்ட வழக்காகும். எனவே அதை இந்த வழக்கில் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் எ.சா.ஆ.1, எ.சா.ஆ.4, எ.சா.ஆ.5 ஆவணங்களை குறியீடு செய்யும் போது வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்று ஆட்சேபனை செய்தார். எ.சா.1 தனது சாட்சியத்தில் 17.11.2024 அன்று புகார்தாரர் எனது வீட்டிற்கு வந்து பத்திரத்தை பிடுங்கி கொண்ட ஆவணம் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் எ.சா.1 எதிரி தனது குறுக்குவிசாரணையில் எ.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் பக்கத்தில் உள்ள

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:14:16 +0530

சங்கதிகள் சரிதான் என்றும், அதை நான் தான் எழுதினேன் என்றால் சரிதான் என்றும், இந்த ஆவணத்தை பற்றி பதில் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும், அந்த ஆவணத்தின் முதல் பக்கத்தில் தேதி இல்லை என்றால் சரிதான் என்றும், இது தொடர்பாக நானும் எனது மனைவியும் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே இந்த ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்பதும் எதிரி மிரட்டி பத்திரத்தை வாங்கி சென்றார் என்பதும் இந்த ஆவணத்தின் மூலம் எதிரி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. உண்மையில் வழக்கு காசோலை இந்த வழக்கின் புகார்தாரருக்கு வழங்கப்படாத பட்சத்தில் எந்த சட்டபூர்வமான கடனை தீர்ப்பதற்காக அந்த காசோலை யாருக்கு வழங்கப்பட்டது என்பது குறித்து நிரூபணம் செய்யவேண்டியது எதிரியின் கடமையாகும். வழக்கை பொருத்தவரையில் வழக்கு காசோலை என்பது சட்டபூர்வமான கடனுக்கு வழங்கப்படவில்லை. அந்த காசோலையின் உண்மை தன்மையை மெய்ப்பிக்கும் சுமை இந்த எதிரியையே சாரும். இந்த வழக்கில் எதிரி வழக்குக்கு முந்தைய நிலையில் ஏதாவது புகார் கொடுத்ததாக இந்நீதிமன்றத்தில் எதிரி தரப்பால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், இந்த வழக்கை பொறுத்து எதிரிக்கும் புகார்தாரருக்கும் சட்டப்படியான தீர்க்கக்கூடிய, வலியுறுத்தக்கூடிய கடன் உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் புகார்தாரர் தன் மனுவிலோ, முதல் விசாரணையிலோ, ஆவணங்களின் வாயிலாகவோ, வாய்மொழி சாட்சியங்களின் வாயிலாகவோ தீர்க்கமாக கூறவில்லை என்றும், எதிரி கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளார் என்று வாதிட்டார்.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:14:26 +0530

18. புகாரை பொறுத்தவரையில் வழக்கு காசோலை சட்டபூர்வமான கடனை தீர்ப்பதற்காக வழங்கப்பட்டது என சாட்சியம் அளித்து, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில், மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139 ன் கீழான அனுமானத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இந்த வழக்கில் புகார்தாரர் காசோலை சம்மந்தமாக சாட்சியம் அளித்து அவரது தரப்பால் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதை பரிசீலனை செய்து பார்க்கும் போது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139 ன் கீழான அனுமானத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

19. எதிரி இந்த வழக்கை பொறுத்தவரையில் வழக்கு காசோலை என்பது சட்டபூர்வமான கடனை தீர்ப்பதற்காக புகார்தாரருக்கு வழங்கப்படவில்லை என குறுக்குவிசாரணையில் புகார்தாரரை குறுக்குவிசாரணை செய்திருந்தாலும், வழக்கு காசோலை என்பது எவ்வாறு தனது பாதுகாப்பில் இருந்து தவறாக பயன்படுத்தப்பட்டது, அந்த காசோலை தவறாக பயன்படுத்தப்பட்டது சம்மந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என தகுந்த சாட்சியங்களை அல்லது சான்றாவணங்களை முன்னிலைப்படுத்த வேண்டியது எதிரியின் கடமையாகும். எதிரியை பொருத்தவரையில் இந்த வழக்கில் வழக்கிற்கு முந்தைய சூழ்நிலையில் எந்தவிதமான எதிர்வாத சங்கதிகளையும் வழக்கு காசோலை தவறாக பயன்படுத்தபட்டது குறித்து வழக்கறிஞர் பதில் அறிவிப்பு மட்டும் அனுப்புள்ளார். ஆனால் தனது காசோலை தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கு எதிரி சட்டபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்பதால் வழக்கு சங்கதிகளை எதிரி ஒத்துக்கொள்வதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. வழக்கின் கடனுக்காக வழங்கப்பட்ட காசோலை என்பது எதிரி தன்னிடமிருந்து 3 காசோலைகளை பெற்றுக் கொண்டார் என்றும், நானும் புகார்தாரரை நம்பி பூர்த்தி

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:14:34 +0530

செய்யப்படாத காசோலையினை என் கையொப்பம் போட்டு கொடுத்தேன். தான் கடனாக வாங்கிய ரூ.3,00,000/—ல் ரூபாய்.1,20,000/— பணத்தை ஜி.பே. மூலமாக வெவ்வேறு தேதிகளில் அனுப்பிவிட்டேன் என கூறியுள்ளது ஏற்புடையதாக இல்லை.

20. மேலும் எதிரி காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பத்தை தன்னுடையது இல்லை என்று மறுக்கவில்லை. காசோலை எதிரியை நம்பி தான் நிரப்பப்படாத காசோலையில் கையொப்பம் போட்டு கொடுத்தேன் என்று சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபிக்க வேண்டிய கடமை எதிரியைச் சார்ந்ததாகும். ஆனால் இவ்வழக்கில் எதிரி அந்த நிலைப்பாட்டை நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்த வழக்கை பொறுத்தவரை புகார்தாரர் எதிரி தன்னிடம் வாங்கிய கடனுக்காக காசோலை வழங்கினார் என்பதையும், ம.சா.ஆ.1 காசோலை மூலமாக நிரூபித்துள்ளார் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

21. காசோலை மோசடி வழக்கில் புகார்தாரர் குறிப்பிட்ட வழக்கின் சங்கதிகளை மறுதலித்து எதிர்வாத சங்கதிகளை எதிரி முன் வைத்து ஒரு மேலோட்டமான சந்தேகத்தை ஏற்படுத்தினாலே (Preponderance of Probabilities) அந்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக வழங்க வேண்டுமென்பது அடிப்படை விதி ஆகும். இந்த வழக்கை பொறுத்தவரையில் எதிரி அவ்வாறு புகார்தாரர் தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை. மேலும் தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்யவில்லை என நீதின்றம் தீர்மானிக்கிறது. மேலும் எதிரி வழக்கிற்கு முந்தைய நிலையில் எந்தவிதமான எதிர்வாத சங்கதிகளையும் எடுத்துக் கூறாமல் வழக்கு விசாரணை சமயத்தில் வழக்கு காசோலை சட்டபூர்வமான கடனை தீர்ப்பதற்காக வழங்கப்படவில்லை என கூறியிருப்பது

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:14:41 +0530

ஏற்புடையதாக இல்லை. ம.சா.1ன் சாட்சியம் மற்றும் குறுக்குவிசாரணையை பரிசீலனை செய்து பார்க்கும் போது புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே பணம் பரிவர்த்தனை மற்றும் கொடுக்கல் வாங்கல் இருந்துள்ளது என்பது தெரியவருகிறது. எதிரியை பொறுத்தவரையில் இந்த காசோலை புகார்தாரருக்கு வழங்கப்படவில்லை என குறுக்குவிசாரணையில் சாட்சியம் அளிக்கப்பட்ட பின்னர் அந்த காசோலை எந்தவிதமாக மோசடியாக புகார்தாரரால் இந்த வழக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை மெய்ப்பிக்கும் சுமை எதிரியையே சாரும். அந்த வகையில் பார்க்கும் போது எதிரி வழக்கிற்கு பிந்தைய நிலையில், எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ள போதும் புகார்தாரரின் வழக்கை மறுதலிக்கும் விதமாக எந்தவிதமான எதிர்வாத சங்கதிகளையும் முன்னிலைப்படுத்தவில்லை. மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139ன் கீழான அனுமானம் என்னவென்றால் புகார்தாரரிடம் இருக்கும் காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்று எதிரி எந்த நிலையிலும் கூறவில்லை என்பதால் அந்த காசோலை சட்டப்படியான ஒரு கடனுக்காக வழங்கப்பட்ட காசோலை என்று நீதிமன்றம் அனுமானிக்க வேண்டும் என்று சொல்கிறது. எனவே இந்த வழக்கில் புகார்தாரருக்கும் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் பரிவர்த்தனை உள்ளது என்றும், எதிரி புகார்தாரருக்கு வழங்கிய காசோலை சட்டபூர்வமான கடனை தீர்ப்பதற்காக வழங்கப்பட்டது என்றும் முடிவு செய்யப்படுகிறது. புகார்தாரர் தனது வழக்கை சாட்சிய மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

22. முடிவாக, புகார்தாரர் எதிரி மீதான மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் கீழான காசோலை மோசடி வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம்

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:14:47 +0530

செய்துள்ளதாக முடிவு செய்து எதிரியை குற்றவாளி என கு.வி.மு.ச. பிரிவு 255(2)ன் படி தீர்மானித்து எதிரிக்கு **ஒரு வருடம்** மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், வழக்கின் தன்மை, சூழ்நிலை, புகார்தாரரிடமிருந்து ரூ.6,00,000/- கடனாக பெற்று அதற்காக காசோலையை கொடுத்து அந்த காசோலை எதிரியின் வங்கி கணக்கு Reason: போதிய பணமில்லை என திருப்பப்பட்டு அதற்கு சட்டபூர்வமான அறிவிப்பு புகார்தாரரால் அனுப்பப்பட்டு, அந்த அறிவிப்பை பெற்றுக் கொண்ட பின்னர் காசோலை தொகையை எதிரியால் கொடுக்கப்படாத நிலையில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியமான சூழ்நிலை புகார்தாரருக்கு ஏற்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொண்டும், புகார்தாரருக்கு ஏற்பட்டுள்ள காலவிரையம், பொருள் விரையம் ஆகியவற்றை கணக்கில் கொண்டும், வழக்கின் காசோலை தொகையான **ரூ.6,00,000/-**த்தை ஒரு மாத கால கெடுவிற்குள் நஷ்டஈடாக எதிரி புகார்தாரருக்கு கொடுக்க வேண்டுமென கு.வி.மு.ச. பிரிவு 357(3)ன் படி உத்தரவிடப்படுகிறது. நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்படவில்லையெனில் மேலும் ஒரு மாதம் மெய்க்காவல் சிறைத் தண்டனை விதித்தும் உத்தரவிடப்படுகிறது.

23. தண்டனை தீர்ப்பு என்பதால் கு.வி.மு.ச. பிரிவு 363 ன் படி தீர்ப்பின் நகல் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. தீர்ப்பு வழங்கிய பிறகு இது தண்டனை தீர்ப்பு என்பதால், தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் எதிரிக்கு கட்டணமின்றி கு.வி.மு.ச 363(2)-ன் படி வழங்கப்பட ஆணையிடப்படுகிறது.

24. எதிரி எழுதி கொடுத்த பிணை முறி ஆவணம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகவேண்டியுள்ளது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:14:56 +0530

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் வடிவமைத்து தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:15:04 +0530

நீதித்துறை நடுவர் எண்.I,
அரியலூர்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:

வ. எண்.	மனுதாரர் தரப்பு சாட்சிகளின் பெயர்	சாட்சிகளின் வகைப்பாடு
ம.சா.1	திரு.முத்துவேல்	புகார்தாரர்

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:

வ.எண்.	குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள்	யார் மூலம் குறியீடு செய்யப் பட்டது.
ம.சா.ஆ.1	27.06.2023ந் தேதியிட்ட எதிரி வழங்கிய திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளையின் காசோலை (காசோலை எண்.676650)	ம.சா.1
ம.சா.ஆ.2	30.06.2023ந் தேதியிட்ட அரியலூர் கிளை இந்தியன் வங்கியால் கொடுக்கப்பட்ட காசோலை திருப்பப்பட்ட மெமோ	ம.சா.1

ம.சா.ஆ.3	08.07.2023ந் தேதியிட்ட எதிரிக்கு புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்	ம.சா.1
ம.சா.ஆ.4	எதிர்மனுதாரர் எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல்	ம.சா.1

<u>எதிரி தரப்பு சாட்சிகள் :</u>

வ. எண்.	எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகளின் பெயர்	சாட்சிகளின் வகைப்பாடு
எ.சா.1	திரு.குமார்	எதிர்மனுதாரர்
எ.சா.2	திரு.ஸ்ரீனிகணேசன்	இந்தியன் வங்கி கிளை மேலாளர்
எ.சா.3	திரு. சக்திவேல்	RR Scale நிறுவனத்தின் ஊழியர்
எ.சா.4	திரு.மணிகண்டன்	சிட்டி யூனியன் வங்கி மேனேஜர்

<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u>:

வ.எண்.	குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள்	யார் மூலம் குறியீடு செய்யப் பட்டது
எ.சா.ஆ.1	21.07.2022 முதல் 04.09.2024 வரை புகார்தாரருக்கு G-Pay மூலம் பணம் அனுப்பியதற்கான G-Pay பரிவர்த்தனை கணக்கு விபரங்கள் எண்ணிக்கை - 21, இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 65 Bன் படியான சான்றுடன்	எ.சா.1

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:15:14 +0530

எ.சா.ஆ.2	புகார்தாரர் எதிரி மீது கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கை அறிக்கை Online Copy	எ.சா.1
எ.சா.ஆ.3	17.11.2024 ந் தேதி புகார்தாரர் எதிரிக்கு எழுதி கொடுத்த ஆவணம்	எ.சா.1
எ.சா.ஆ.4	எதிரியின் வங்கி கணக்கு ஸ்டேட்மெண்ட் 18 பக்கங்கள்	எ.சா.2
எ.சா.ஆ.5	சக்திவேல் என்பவருடைய வங்கி ஸ்டேட்மண்ட் முதல் பக்கம் மற்றும் ஜீபே பரிவர்த்தனைகளின் ஸ்டேட்மண்ட்	எ.சா.4

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.08.18 17:15:20 +0530

நீதித்துறை நடுவர் எண்.I,
அரியலூர்.